JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **277/2010** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 10** | Prosecution /Defence / Court | |
| Name | ஈஸ்வரமூர்த்தி | Village | |
| Father's Name | மோகனசுந்தரம் | Taluk | |
| | | Age | |

**All Accused absent. Petition filed and allowed.**

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 24.02.2026.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு ஆதிரா வெள்ளி மாளிகை என்ற பெயரில் நகைக் கடை வைத்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும். நானும், சத்தியமூர்த்தியும் ராதா வெள்ளி மஹால் என்ற பெயரில் கடை நடத்தி வந்தோம். 06.10.2009 ம் தேதி கடையில் இருந்து வெள்ளி கொலுசுகள் காணாமல் போய்விட்டது இது தொடர்பாக சத்தியமூர்த்தி பெருந்துறை காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தார். 07.10.2009 ம் தேதி பெருந்துறை காவல் ஆய்வாளர் திருட்டு போன இடத்திற்கு வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார். பார்வை மகஜரில் முதலாவதாக நானும், இரண்டாவதாக பத்மநாபன் என்பவரும் சாட்சி கையொப்பங்களை செய்தோம். **பார்வை மகஜர் அ.சா.ஆ. 22 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பெருந்துறை காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** கடையின் R.C புத்தகம் எந்த பெயரில் உள்ளது என்றால் ராதா வெள்ளி

மாளிகை என்ற பெயரில் உள்ளது. R.C புத்தகத்தின் நகலை போலீசார் விசாரணையின் போது கொடுத்தேனா என்றால் இல்லை. எத்தனை பேர் ராதா வெள்ளி மாளிகை கடையின் பங்குதாரர் என்றால் 4 பேர். போலீசார் விசாரணையின் போது எங்களுடைய கூட்டு பங்குதாரர்கள் நிறுவனத்தின் ஆவணத்தை கொடுக்கவில்லை என்றால் சரிதான். புகார் சத்தியமூர்த்தி தான் கொடுத்தார். எங்களுடைய நகைக் கடையில் நகைகள் வாங்கியதற்கான இருப்பு வைப்பதற்கான பதிவேடுகள் உள்ளது என்றால் சரிதான்.

2. வெளியில் இருந்து வெள்ளி கொலுசுகள் வாங்கி வந்தால் அதற்கான ரசீதுகள் இருக்கும் என்றால் சரிதான். மேற்படி ரசீதுகளை போலீசார் விசாரணையின் போது அ.சா.1 கொடுத்தாரா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. என்னுடைய அலுவலகத்தில் சம்பவத்தன்று எத்தனை பேர் பணியில் இருந்தார்கள் என்ற விவரம் வருகை பதிவை பார்த்தால் தான் தெரியும் என்றால் சரிதான். அதை போலீசார் விசாரணையில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ. 14 ஆவணத்தில் என்ன எழுதியுள்ளது என்று முழுமையாக சொல்ல முடியாது என்றால் சரிதான். கடை எங்குள்ளது என்று எழுதியிருந்தது. அ.சா.ஆ.14 ல் கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து செய்து விட்டு சம்பவ இடத்தில் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை

(எதிரி ஆஜரில் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 ன் படி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது).